கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 03.04.2025 அ.வ.எண் . 46/2023 .வா.சா. 2 . மணியரசு, த/பெ, சுப்பையன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் பெரும்பதியில் குடியிருக்கிறேன். நான் என்ன தொழில செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அழைப்பாணையை எடுத்து வந்துள்ளேனா என்றால் அலைபேசி மூலமாக வந்தது. எனக்கும் வாதி சுரேஷ்குமாருக்கும் எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றால் 30 வருடமாக பழக்கம். எனக்கு வாதி உறவினரா என்றால் தூரத்து உறவினர் ஆவார். அலைபேசியில் இன்று வரும்படி என்னை அழைத்தார்கள் இதற்கு முன்பு 13.03.2025 அன்று நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் வாதி கூறினார். பிரதிவாதி செந்தில்குமாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி சுரேஷ்குமார் என்ன வேலை செய்கிறார் என்றால் எல் ஐ சி - யில் முகவராக உள்ளார். நான் அவரிடம் பாலிசி போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன் . பிரதிவாதி செந்தில்குமார் என்ன வேலை செய்கிறார் என்றால் ஓட்டுநராக வேலை செய்கிறார். வாதி சுரேஷ்குமார் எங்கு வசித்து வருகிறார் என்றால் தேவராடிபாளையத்தில் வசித்து வருகிறார். வாதி சுரேஷ்குமாரை தேவராடிபாளையத்தில் சென்று பார்த்தேனா என்றால் கிணத்துக்கடவு அலுவலகத்தில் வைத்து பார்த்தேன்.

ஒப்பம்/- (R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

3) வாதி சுரேஷ்குமாரின் வீடு கிணத்துக்கடவில் இல்லை என்றால் சரிதான். நான்எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் பிரதிவாதி செந்தில்குமார் வாதி சுரேஷ்குமாரிடம் பணம் வாங்கியது குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி செந்தில்குமார் எங்கு வசித்து வருகிறார் என்றால் சொலவம்பாளையத்தில் வசித்து வருகிறார். பிரதிவாதிக்கும் எனக்கும் என்ன பழக்கம் என்றால் பிரதிவாதி எனது நண்பர் ஆவார். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல, வாதி கேட்டுக்கொண்டதால் எனது பிரமாண பத்திரிக்கையில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி பணம் வாங்கியது எனக்கு தெரியும் அதனால் நான் சாட்சியாக இருப்பதற்கு ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். பிரதிவாதி வாதியிடம் எவ்வித பணமும் வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனது பிரமாண பத்திரிக்கையில் சொன்னபடி பிரதிவாதி வாதியிடம் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் பணம் வாங்கவில்லை என்றும் வாதி கேட்டுக்கொண்டதால் பணம் வாங்கியதாக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடந்த வரவு செலவு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R. சுஜாதா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி